**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No.218/2020</u>**

**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.புரோஸ்கான் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முகமது செரிப் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | புதுக்கோட்டை | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 30.06.2026.

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. )**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை பட்டப்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 09.05.2017 அன்று காலை 10.15 மணிக்கு நான் தென்காசி அரசு மருத்துவமனையில் பணியில் இருக்கும் போது, காந்திசெல்வின் என்ற 45 வயதுடைய ஆண் நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஓட்டுநர் சண்முகநாத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபரும், அடையாளம் தெரியாத 4 நபர்களும் அதே தினம் காலை 10.00 மணிக்கு மேலமெஞ்ஞானபுரம் குஷி வாட்டர்பார்க் அருகே அரிவாள் மற்றும் லிவர் ஆகியவற்றால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). 5 x 1 x 1 cm அளவில் வெட்டுக்காயம் அவருடைய தலையின் நடுப்பகுதியில் இருந்தது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சையளிக்கப்பட்டு 17.05.2017 அன்று அவர் தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து

வெளியேறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று வழங்கினேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்தில் அவர் சொன்ன மாதிரி தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா? இல்லையா? என்பது குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் ஆயுதங்களை காண்பித்து என்னிடம் கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான். ஒருவர் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது, நிலை தடுமாறி கீழே விழுந்து கூர்மையான கல்லில் பட்டால் நான் பார்த்த காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Dr. Rajaganesh, P.G.Anaesthesia, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.02 13:46:08 +0530